

சுதந்திர போராட்ட தியாகி தீரன் சின்னமலையின் நினைவு தினத்தையொட்டி சேலம் சங்ககிரியில் உள்ள கோட்டையில் தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்திற்கு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர். கே.என். நேரு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இரா.இராஜேந்திரன். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.கார்மேகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் இருந்தனர்.

கல்வி நிறுவனங்கள், தொழிற் துறையினருடன் இணைந்து செயல்பட,

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4 -

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், 01 ஆகஸ்ட் 2023 அன்று மக்களவையில், கல்வி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரசு தொழிற் துறையினருடன் இணைந்து செயல்படும் வகையில், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா என்றும் வர்த்தக சந்தைகளுக்கு ஏற்ற வகையில், பாடத்திட்டங்களில் மாற்றம் செய்யப்படுமா என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு அளிக்க இயலுமா?



என்றும், ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் திருமதி அன்னபூர்னா தேவி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கல்வித் துறை அமைச்சர், அளித்த பதில் பின்வருமாறு :

இடைநிலைப்பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பாலிடெக்னிக்கள் ஆகிய கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தொழிற் துறை நிறுவனங்களுடன் இணைந்தும் செயல்பட தேசிய கல்விக் கொள்கை 2020ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், தேசி தொழில் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் குறிப்பிடப்பட் டுள்ள பல்வேறு பயிற்சிகளுக்கு தேவையான வகையில் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக வும், பல்வேறு தொழில்துறை நிறு வனங்களுக்கு தேவையா புதிய பயிற்சிகள் தேர்ந்த நிபுணர்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டு வருவதாகவும், இதனால் தொழிலாளர்களின் திறன் மேம்பாடு உறுதி செய்யப்பட்டு, தொழிற் கல்வி நிலையங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது என்று ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் திருமதி அன்னபூர்னா தேவி மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உற்பத்தி இருமடங்காக அதிகரிக்கப்படுகிறது!

# விவசாயிகளுக்கு மானியத்தில் தக்காளி நாற்றுகள் வழங்க ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு!

## விலையைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை; தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தகவல்!

சென்னை, ஆக. 4 -

தமிழ்நாட்டில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தக்காளி ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில் முதல் ரக தக்காளி ஒரு கிலோ ரூ.200ஐ தாண்டியும் விற்பனையானது. தக்காளி விலை உயர்வால், சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு லட்சக்கணக்கில் வருவாய் கிடைத்து வருகிறது. ஆனால், இந்த விலை உயர்வால் பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தக்காளி விலையை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 500 ரேஷன் கடைகளில் தக்காளி கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக கிலோ ரூ.90க்கு தக்காளி கொள்முதல் செய்யப்படுகிறது. இந்நிலையில் தக்காளி உற்பத்தியை அதிகரிக்கவும், விலையை கட்டுப்படுத்தவும் தோட்டக்கலைத்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி தக்காளி உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு அரசு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழ்நாட்டில் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், விவசாயிகளுக்கு தக்காளி, கத்தரிக்காய், மிளகாய் உள்ளிட்ட பல்வேறு வகையான நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மாநிலம் முழுவதும் 1,500 ஹெக்டேர் பரப்பளவுக்கு விவசாயிகளுக்குத் தேவையான தக்காளி நாற்றுகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. தற்போது தக்காளி விலை உயர்ந்துள்ளதால், உற்பத்தியை அதிகரித்து விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் தக்காளி சாகுபடி பரப்பளவு இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநிலம் முழுவதும் 15 மாவட்டங்களில் தோட்டக்கலைத்துறை சார்பில் 3 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு தக்காளி சாகுபடி செய்ய நாற்றுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தக்காளி நாற்று தேவைப்படும் விவசாயிகள் ஆதார் அட்டை, நிலத்திற்கான சிட்டாவுடன் அருகில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்திற்குச் சென்று விண்ணப்பித்து பெறலாம். ஒரு ஹெக்டேருக்கு தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு நாற்றுகள், இடுபொருட்கள், பராமரிப்பு உள்ளிட்டவற்றுக்கு ரூ.50 ஆயிரம் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு ஹெக்டேருக்குத் தேவையான ரூ.15 ஆயிரம் மதிப்பிலான தக்காளி நாற்றுகள், ரூ.5 ஆயிரம் மதிப்பிலான இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது. அந்த இடுபொருட்களை குறிப்பிட்ட காலத்துக்கு பயன்படுத்திய பிறகு மீதமுள்ள செலவினத்தை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கையால் விரைவில் தமிழ்நாட்டில் தக்காளி உற்பத்தி அதிகரித்து விலையும் கட்டுக்குள் கொண்டுவரப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

மாநிலம் முழுவதும் தோட்டக்கலைத்துறை சார்பில் தக்காளி சாகுபடிக்கான பரப்பளவு 1,500 ஹெக்டேரில் இருந்து 3 ஆயிரம் ஹெக்டேராக இருமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பல மாவட்டங்களில் பல மடங்கு சாகுபடி பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி வேலூர் மாவட்டத்துக்கு கடந்த ஆண்டுகளில் 10 ஹெக்டேர் பரப்பளவுக்கு தக்காளி நாற்றுகள் உற்பத்தி செய்து வினியோகிக்கப்பட்ட நிலையில், தற்போது 150 ஹெக்டேர் பரப்பளவுக்குத் தேவையான தக்காளி நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்றைய நிலவரப்படி வேலூர் அடுத்த அகரம்சேரி தோட்டக்கலை பூங்காவில் 3 லட்சம் தக்காளி நாற்றுகள் தயாராக உள்ளது.

மாவட்டம் வாரியாக தக்காளி சாகுபடிக்கு ஒதுக்கப்பட்ட நிதி மாவட்டம் பரப்பளவு -(ஹெக்டேர்) நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு:

தேனி 150 ரூ.30 லட்சம், திருப்பத்தூர் 10 ரூ.30 லட்சம், திருப்பூர் 300 ரூ.60 லட்சம், திருநெல்வேலி 30 ரூ.6 லட்சம், வேலூர் 150 ரூ.30 லட்சம், கோவை 200 ரூ.40 லட்சம், தர்மபுரி 550 ரூ.110 லட்சம், திண்டுக்கல் 350 ரூ.70 லட்சம், ஈரோடு 40 ரூ.8 லட்சம், கள்ளக்குறிச்சி 40 ரூ.8 லட்சம், கிருஷ்ணகிரி 500 ரூ.1 கோடி,

மதுரை 30 ரூ.6 லட்சம் , சேலம் 350 ரூ.70 லட்சம், தென்காசி 80 ரூ.16 லட்சம்,

### 50வது நாளில் தக்காளி காய்க்கும்!

வேலூர் அடுத்த அகரம்சேரி தோட்டக்கலை பூங்காவில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் தக்காளி நாற்றுகள் விதைத்த 4 முதல் 5வது நாளில் முளைத்துவிடுகிறது. இதை பயிரிட்ட 45வது நாளில் பூக்கள் பூத்து, 50வது நாளில் காய்க்க தொடங்கி விடும். இதையடுத்து குறிப்பிட்ட சில நாட்களில் தக்காளி அறுவடை செய்து விடலாம் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதை உணர முடிகிறது!

# விளையாட்டால் வளம் பெறட்டும்; தமிழ்நாட்டின் வருங்காலம்!

## 'இந்து தமிழ் திசை' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 4 -

தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதை உணர முடிகிறது. விளையாட்டால் வளம் பெறட்டும்; தமிழ்நட்டின் வருங்காலம் என்று 'இந்து தமிழ் திசை' நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

இது குறித்து அந்நாளேடு, 3.8.2023 தேதிய தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:



இந்து தமிழ்

விளையாட்டால் வளம் பெறட்டும் தமிழ்நாட்டின் வருங்காலம்!

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி, 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் நடத்தப்பட இருப்பது மகிழ்ச்சிக்குரியது. மாமல்லபுரத்தில் 2022ஆம் ஆண்டு செஸ் ஒலிம்பியாட் போட்டி நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இப்போது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஹாக்கி போட்டி நடத்தப்படுகிறது. இதன் மூலம் சர்வதேச விளையாட்டு வரைபடத்தில் தமிழ்நாட்டை ஒரு முக்கியப் புள்ளியாக மாற்றுவதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கவனம் செலுத்திவருவதை உணர முடிகிறது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா ஆகிய ஆறு நாடுகள் பங்கேற்கும் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டிகள், சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கத்தில் இன்று (ஆகஸ்ட் 3) தொடங்கி 12ஆம் தேதி வரை நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிக்காக மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கம் ரூ.16 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது; சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்பப் பயிற்சி ஆடுகளம் உள்ளிட்ட வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டில் இந்தப் போட்டி நடைபெறுவதைச் சிறப்பிக்கும் விதமாக, விளையாட்டு அரங்கத்தின் ஒரு பகுதிக்குக் 'கலைஞர் நூற்றாண்டு மாடம் (பெவிலியன்)' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

செஸ் ஒலிம்பியாட் போலவே ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி போட்டித் தொடரை நடத்தும் வாய்ப்பையும் மிகுந்த போட்டிக்கு இடையில்தான் தமிழ்நாடு அரசுவென்றெடுத்திருக்கிறது. ஒடிஷாவில் ஹாக்கி உலகக் கோப்பை நடைபெற்ற நிலையில், இந்தப் போட்டியையும் அங்கேயே' நடத்துவதற்கான திட்டம் இருந்தது. தமிழ்நாடு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஒடிஷாவுக்குச் சென்று அம்மாநில முதல்வர் நவீன் பட்நாயக், சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு, ஆசிய ஹாக்கி கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்துப் பேசி, தமிழ்நாட்டுக்கு இந்த வாய்ப்பைப் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

மாணவர்களையும் சர்வதேசப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்துவதற்கு இணையாக மாநிலம் முழுவதும் கிரிக்கெட், கால்பந்து உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளில் திறமையுடன் விளங்கும்

இளைஞர்களையும் மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை அளிப்பது, அரசு சார்பில் பல விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது ஆகியவற்றில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தொடர்ந்து கவனம் செலுத்திவருவதும் பாராட்டத்தக்கது.

அதே நேரம், விளையாட்டுகளில் திறமையை வெளிப்படுத்தும் மாணவர்கள் மட்டுமல்லாமல் விளையாட்டில் ஆர்வம் செலுத்தாத மாணவர்களுக்கும் விளையாட்டின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு, விளையாட்டில் ஈடுபடுவதற்கான பயிற்சியை அவர்களுக்கு அளிப்பதிலும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலும் அரசு அக்கறை செலுத்த வேண்டும். மாணவப் பருவத்தில் உள்ள அனைவரையும் விளையாட்டில் ஈடுபடச் செய்வதை அரசு இலக்காகக் கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு விளையாட்டில் சிறுவயதிலிருந்தே தொடர்ந்து ஈடுபடுவது உடலைக் கட்டுக்கோப்பாகப் பேணுவதற்கு முதன்மையான உந்துசக்தியாக அமையும். மது, புகை போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்படாமல் தடுக்கும். அத்துடன், 'குழு விளையாட்டுகளில் ஈடுபடுவது இளைஞர்களிடையே சாதி, மதம் கடந்த நட்புகளையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதில் பெரும் பங்காற்ற முடியும். வளமான வருங்காலத்தைக் கட்டியெழுப்ப விளையாட்டின் அளப்பரிய பங்களிப்பை உணர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் அனைவரையும் ஈடுபடுத்துவதற்கான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சிராப்பள்ளி
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.16/2023-2024/தவஅ/நாள்-01.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் (நெ) க(ம)ப கோட்டம்** சார்ந்த **1 பணி மற்றும் மயிலாடுதுறை (நெ) க(ம)ப கோட்டம்** சார்ந்த 1 பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **24.08.2023 அன்று 14.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **07.08.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4268/ஒப்பந்தப்புள்ளி/2023
**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சிராப்பள்ளி
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.15/2023-2024/தவஅ/நாள்-31.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் (நெ) க(ம)ப கோட்டம்** சார்ந்த **1 பணி மற்றும் மயிலாடுதுறை (நெ) க(ம)ப கோட்டம்** சார்ந்த 1 பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **24.08.2023 அன்று 14.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **07.08.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4267/ஒப்பந்தப்புள்ளி/2023
**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# நாமக்கல் மாவட்டம் - புதுச்சத்திரத்தில் கால்நடை கிளை நிலையம்!

## பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

நாமக்கல் ஆக. 4 -

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் ஒன்றியம் கரடிப்பட்டி ஊராட்சி கொளத்துப்பாளையம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடை கிளை நிலையத்தை நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராம லிங்கம் திறந்து வைத்தார்.

அதன்பிறகு மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவரின் நிதியிலிருந்து கொளத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு ரூ 2 லட்சம் மதிப்பீட்டில் மேஜை, நாற்காலிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் அவருடன் புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் செந்தில் குமார், ஒன்றிய குழுத் துணைத் தலைவர் ராம்குமார், கரடிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் தங்கம்மாள் முத்துசாமி, துணைத் தலைவர் கிருஷ்ணவேணி, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மருதுபாண்டி, மண்டல இணை இயக்குனர் நடராஜன், கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் அசோகன், தர்மகர்த்தா சின்னத்தம்பி, கழக நிர்வாகிகள் துரைமுருகன், நல்லுசாமி, சம்பத், சண்முகம் மற்றும் கால்நடை மருத்துவர்கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**
இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.பி4/032/2023
**மின்னணு ஒப்பம்**

**கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே & இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)**

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
| --- | --- | --- |
| பி4/ 032 / 2023 | பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5 லாரி நிலையத்தில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு 37 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதங்களுக்கு பணியமர்த்துதல். | ரூ.69,300/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 21.08.2023 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 22.08.2023 மதியம் 3.15 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 4283 / ஒப்பந்தப்புள்ளி / 2023
மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே & இயந்திரம்)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
**ஒ.அ.எண். 15 / 2023–24 / தவஅ / நாள் 28.07.2023.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **நாமக்கல் (நெ) க(ம)ப கோட்டத்தைச்** சார்ந்த 2023–24 திட்டம் சாரா **நான்கு பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **07.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ),**
**செ.ம.தொ.இ/4226/ஒப்பந்தப்புள்ளி/2023**
**க(ம)ப, சேலம் வட்டம்.**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."




தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா 2023 தொடக்க நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (02.08.2023) வழங்கினார். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் / தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி (பென்னாகரம்), எஸ்.பி.வெங்கடேஷ்வரன் (தருமபுரி), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஏராளமானோர் உள்ளனர்.

அமெரிக்காவில்

# பிளாஸ்டிக் பயன்படுத்த கட்டுப்பாடு!

நியூயார்க், ஆக. 4 –

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி டன்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது.

இதில் 95 சதவீதம் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகள் என நுகர்வோர் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியின் அறிக்கை கூறுகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றான நியூயார்க்கில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகளை குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக அந்த நகர மேயர் எரிக் ஆடம்ஸ் கூறினார்.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒ.அ.எண். 25/2023-24/ தவஅ/ நாள் : 01.08.2023.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 வேலூர்** (நெ), க(ம)ப, கோட்டத்தை சார்ந்த **காங்கேயநல்லூர் முதல் சத்தூவாச்சேரி கிராமத்தினை இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் இன வாரி ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறை முறையில் இணைய வழி மட்டுமே 22.08.2023** அன்று **12.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **03.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ),**
செ.ம.தொ.இ./ 4216 /ஒப்பந்தப்புள்ளி/2023
**க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"